www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

23 OCTOBER 2022 - SUNDAY | Pages - 10 | E Paper - # 012 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk



தமிழ் சகோதர வாசகர் உள்ளங்கள் அனைவருக்கும் இனிய தீபத் திருநாள் நல் வாழ்த்துக்கள்!



ஸஹ்ரியன் பிரிமியர் லீக் சீசன்–02

06



# 22 இற்கு எதிரான சதிகள் முறியடிப்பு

நீதியமைச்சர் விஜேதாஸ தெரிவிப்பு!

## புதிய அரசியலமைப்பையும் கொண்டு வருவோம்!

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான அனைத்துச் சதித்திட்டங்களும் படுதோல்வியில் முடிவடைந்தன என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"22 ஆவது திருத்தச் சட்டத்தைத் தோற்கடிக்க ஆளும் தரப்புக்குள்ளும் எதிரணிப் தரப்புக்குள்ளும் இருந்து சிலர் சதித்திட்டங்களைத் தீட்டினர். இதற்கு நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருந்து ஒரு பெரிய புள்ளி தலைமை தாங்கினார். ஆனால், இறுதியில் அனைத்துச்

02 »»

# யானை மேல் ஏறத் தயாராகும் பிரசன்னா?



பாராளுமன்றத்தின் கட்சியின் பிரதம கொரடாவான அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர்

02 »»

# நீர்கொழும்பில் இளைஞர் படுகொலை


கட்டுநாயக்க - ஆண்டியம்பலம் பகுதியில் ஞாயிறன்று மாலை (23) பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

03 »»

# மொட்டுக் கட்சிக்குள் வெடிப்பு

22ஆவது அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் தொடர்பான வாக்கெடுப்பில் 25க்கும் மேற்பட்ட மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாததன் எதிரொலியாக பொதுஜன பெரமுனவுக்குள் வெடிப்பு

02 »»



# தேசிய பாடசாலைகள் ஒழிப்பு; முன்னணி பாடசாலை முறை அறிமுகம்!

தேசிய பாடசாலைகள் முறையை ஒழித்து முன்னைய பாடசாலை முறையை அறிமுகப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அடுத்தாண்டு முதல் அமுலுக்கு வரும் கல்விசீர்திருத்தத்தின் ஓர் அங்கமாக

02 »»

# அமெரிக்க பிரஜா உரிமையை கைவிடுகிறார் பஷில்!

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச தனது அமெரிக்கா பிரஜா உரிமையை ரத்து செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான ஆவணங்களை கையளித்தது விட்டு நாடு விரும்பி மொட்டுக் கட்சியை முழுமையாக பொறுப்பேற்றுச் செயற்படவுள்ளதாகவும் பசில் ராஜபக்சவுக்கு என நெருங்கிய தகவல்கள் தெரிவிக்கின்றன.



# மக்கள் நிராகரிக்க முன் உடன் ஓய்வு பெறுங்கள்



## மஹிந்தவிடம் சஜித் கோரிக்கை!

"உடல் பலமும், மனவலிமையும் குறைந்துள்ளதை மஹிந்த ராஜபக்ச உணர்ந்து, மக்கள் நிராகரிக்க முன் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும்."

02 »»

# இலங்கை அணிக்கு அபார வெற்றி

## இந்தியாவும் பாக். ஐ வென்றது!

(ஏ.எம்.றிகாஸ்)

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று (23) இடம்பெற்ற இரண்டு ஆட்டங்களில் இலங்கை மற்றும் இந்திய அணிகள் வெற்றியீட்டியுள்ளன.

இன்றைய முதலாவது போட்டி

03 »»

# ஆசியாவின் தெரு உணவுகளில் அச்சாறு அப்பத்துக்கு முதலிடம்!

## சீ.என்.என். அறிக்கை!

உள்ளூர் வாசனைத்திரவியங்கள், மிளகாய், மஞ்சள், சீனி மற்றும் உப்பு ஆகியவற்றால்

02 »»



# 22 வது திருத்தம் நிறைவேற்றம் அனைவருக்கும் கிடைத்த வெற்றி!

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை ஜனநாயகத்தை மதிக்கும் இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுக்கும் கிடைத்த வெற்றி என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இந்த அரசமைப்புத் திருத்தத்துக்காகத் தொடர்ந்து வாதிட்ட

02 »»



# இம்ரான்கான் மீது மற்றொரு வழக்கு!

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது தற்போது கொலை முயற்சி குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பாகிஸ்தான் முஸ்லீம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சியின் எம்.பி.யான மொஹ்சின் ஷாநவாஸ்

02 »»

Collaborate with...
SIYANE NEWS
www.siyanenews.com facebook.com/Siyanemediacircle twitter.com/SiyaneNews Siyane Media Circle
SIYANE MEDIA CIRCLE (PVT) LTD No. 41, Kahatowita, Veyangoda.
SIYANE Media Circle
SIYANE MEDIA CIRCLE
KAHATOWITA
GA 00213489
மாற்றத்தை நோக்கிய பயணம்

## 22 இற்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சதித்திட்டங்களும் படுதோல்வியில் முடிவடைந்தன.

22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக 179 பேர் வாக்களித்தமை பெரிய விடயம். அதுவும் ஐக்கிய மக்கள் சக்தி ஒரே அணியில் நின்று இந்தத் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளமை போற்றத்தக்கது.

22 இற்கு வெற்றி உறுதி என்பதை ஊகித்துக்கொண்ட சதிகாரக் கும்பலைச் சேர்ந்த சிலர் வாக்கெடுப்புக்கு முன்னரே சபையிலிருந்து வெளியேறி விட்டார்கள். இது அவர்களுக்குக் கிடைத்த பேரவமானமாகும்.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது போல் புதிய அரசமைப்பையும் கொண்டுவந்தே தீருவோம்" - என்றார்.

## மக்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"ராஜபக்சக்களின் அடிமையாக வாழ்ந்த வாழ்க்கையை விட்டொழிக்க மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராஜபக்சவினர் இன்னும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர். அவ்வாறான நிலைமை ஏற்பட இடமளிக்காமல் பாதுகாப்பது மக்களின் பொறுப்பு.

ராஜபக்சவினர் தமது குடும்பத்தில் ஒருவரை மீண்டும் ஜனாதிபதியாக்க முயல்கின்றனர். இது மீண்டும் நாட்டை அழிப்பதற்கான முயற்சியாகும்.

எந்த மனிதருக்கும் எந்த வேலையும் செய்ய முடியாத காலம் வரும். எனவே, உடல் பலமும், மனவலிமையும் குறைந்துள்ளதை மஹிந்த ராஜபக்ச உணர்ந்து, மக்கள் நிராகரிக்க முன் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும். அதிகார மோகம் என்னிடம் இல்லை" - என்றார்.

## 22 வது...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சிவில் மற்றும் அரசியல் சக்திகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையை எதேச்சதிகார ஆட்சிக்கு மாற்றும் நோக்கில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து 22ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானமானது ஒரு மிக முக்கியமான இடைக்கால அரசமைப்பு சீர்திருத்தமாகும். இது புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தத் தருணத்தில், அனைத்து அரசியல் சக்திகளும் இந்தச் சாதனையால் வலுப்பெற்று, ஜனநாயகத்தை வலுப்படுத்தி, நாட்டினதும் மக்களினதும் நிரந்தர நல்லிணக்கத்துக்காக - நிரந்தர தீர்வுக்காக ஓரணியில் செயற்பட வேண்டும்" - என்றார்.

## தேசிய...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

லீட் ஸ்கூல் என்னும் முன்னைய பாடசாலை முறை அமுலுக்கு கொண்டு வரப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இத் திட்டப்படி 1200 முன்னால் பாடசாலைகள் உருவாக்கப்பட்டு பிரதேசத்திலுள்ள சிறிய பாடசாலைகள் இப் பாடசாலைக்கு உள்வாங்கப்படும்.இதன் மூலம் பெரிய பாடசாலைகளுக்கு சிறிய பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கின்றது.

முன்னைய பாடசாலைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பிரதான பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவதற்கு நிகழும் போட்டி இல்லாமல் போகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதே நேரம் தற்போதுள்ள கல்வி வலயங்களின் எண்ணிக்கையை 120 ஆக அங்கீகரிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.தற்போது நாட்டில் 100 கல்வி வலயங்கள் உள்ளன.இதேவேளை புதிதாக கல்விச் சபைகளையும் ஏற்படுத்துவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

## மொட்டுக்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஏற்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கட்சி முக்கியஸ்தர்களான சாகர காரியவசம், மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன பிரசன்ன ரணதுங்க உட்பட 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தின் வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

பொதுஜன பெரமுனவின் கணிசமான பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். சுமார் 25 உறுப்பினர்கள் சுமார் 25 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்கவில்லை என பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆதரவளிக்காத 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் வருமாறு: -

பிரசன்ன ரணதுங்க (வெளிநாடு) விஜேவீர, திசாநாயக்க (வைத்தியசாலையில் அனுமதி) ஜயந்த வீரசிங்க (சுகயீனம்) ஜனக பண்டார தென்னகோன் ஃ சுகவீனம்) எஸ்.எம். சந்திரசேன (வடமாகாண அதிபதியின் மரணச் சடங்கு ஏற்பாட்டில் ஜொன்சன் பெர்னான்டோ (நிதிச் செயற்பாடு)

நாலக பண்டார கோட்டேகொட சகோதரரின் திருமண வைபவம்) மகிந்த ராஜபக்ஷ சனத் நிசாந்த, காமினி லொக்குகே, பவித்ரா வன்னி ஆராச்சி, சாகர காரியவசம், ஜயந்த கடகொட, சஞ்சீக எதிரிமான்ன.

22வது திருத்தப் பிரேரணை மூலம் முன்னாள் நீதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு இனி பாராளுமன்றத்துக்கு வருவதற்கான நிரந்தர கதவு மூடப்பட்டுள்ளது.

## யானை...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

பிரசன்ன ரனதுங்க தமது அரசியல் வழியை மாற்றி யானை மீது ஏறப் போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பிரசன்னவுக்கு தனிப்பட்ட விஜயம் செய்துள்ள அமைச்சர் அங்கு செல்ல முன் மினுவாங்கொட தொகுதி மத்திய குழுவுக்கு ஒரு பொறுப்பினை ஒப்படைத்து வருவதாக தற்போதைய ஜனாதிபதி யைப் பலப்படுத்துவதாக அல்லது பொதுஜன பெரமுனவினை தொடருவதா என்ற கேள்வி விடுக்கப்பட்டது.

இதில் பெரும்பான்மையினர் தற்போதைய ஜனாதிபதி யின் சரத்தை பலப்படுத்துவதற்கு சகலருடன் இணைய வேண்டும் எனத் தீர்மானித்துள்ளார்.இதன்படி அமைச்சர் பிரசன்ன நாடு விரும்பியது தமது அரசியல் எதிர்காலம் பற்றிய தீர்மானம் ஒன்றை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆசியாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தயாரிக்கப்படும், இலங்கை அச்சாறு சிறந்த தெரு உணவாகும். இது பிராந்தியத்துக்கு பிராந்தியம் மற்றும் பருவத்துக்கு பருவம் சுவை மாறுபடும்.

வெறுவாகவோ, விளாம்பழமாகவோ அன்னாசிப்பழமாகவோ, மாம்பழமாகவோ அல்லது அம்பரெல்லாவாகவோ இருக்கலாம் என்று சிஎன்என் செய்தி அறிக்கையிட்டுள்ளது.

மேலும், காலை உணவாக அப்பம் நல்லது என்று சிஎன்என் செய்திச் சேவை கூறுகிறது.

சாதாரண அப்பம் மற்றும் முட்டை அப்பம் பொதுவாக சட்னி, தேங்காய் சாம்பல் மற்றும் பல வகையான கறிகளுடன் நன்றாக இருக்கும் என மேலும் தெரிவித்துள்ளது.

## இம்ரான்கான்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ரஞ்சாவிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், இஸ்லாமாபாத்தில் உள்ள காவல் நிலையத்தில் இம்ரான் கான் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, இம்ரான் கானின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தேர்தல் ஆணையம் இரத்து செய்தது. வெளிநாட்டு பிரமுகர்கள் மற்றும் அரச தலைவர்கள் வழங்கிய பரிசுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்ததாக, 'தோஷகானா வழக்கில்' அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவுக்கு எதிராக பிடிஐ ஆதரவாளர்கள் நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், இஸ்லாமாபாத்தில் உள்ள பாகிஸ்தானின் தேர்தல் ஆணையத்தின் அலுவலகத்திற்கு வெளியே இம்ரான்கானின் ஆதரவாளர்கள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தேர்தல் ஆணைய அலுவலகத்திற்கு வெளியே இம்ரான்கானின் கட்சி ஆதரவாளர்களால் ரஞ்சா தாக்கப்பட்டார்.

தோஷ்கானா வழக்கில் பிரதிவாதியாக தான் ஆஜரான போது, இம்ரானின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டதாக ராஞ்சா தனது எப்.ஐ.ஆரில் கூறியுள்ளார்.பிடிஐ ஆதரவாளர்கள் தனது காரை அடித்து நொறுக்கினர் மற்றும் கற்களை வீசினர் என்றும் எப்ஐஆரில் கூறியுள்ளார்.

இம்ரான் கான் சார்பில் தேர்தல் ஆணையத்தின் முடிவை எதிர்த்து இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

NEWS PLUS இல்,
சிறு விளம்பரங்களை பிரசுரிக்க நாங்கள் தயாராக உள்ளோம்....



உங்கள் வியாபரத்தினை வியாபிக்க...
உங்களது விற்பனைப் பொருட்களை சந்தைப்படுத்த...
அல்லது
நீங்கள் ஏதாவதொரு பொருளை விற்க வேண்டுமா?



ரூபா. 200 முதல் விளம்பரங்களை பிரசுரிக்க முடியும்
Newsplus மின்னிதழில் உங்கள் தரமான விளம்பரங்களை குறைந்த விலையில் இலகுவாக பிரசுரியுங்கள்.....
Collaborate with Publish Partner...
SIYANE NEWS
விற்பனை அடையாளங்களை பிரபல்யப்படுத்துங்கள்
தொடர்புகளுக்கு: பயனை இன்றே அனுபவியுங்கள்...
Rikas - 076 70 23 241
Sanuskanth - 076 260 0343
Rihmy Hakeem - 072 060 3053
Thivagaran - 77 464 6663
Nawfees - 75 510 3901



கொழும்பு அல் ஹிக்மா கல்லூரியின் 92 வது ஆண்டு நிறைவையொட்டிய விழாவும், நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ”ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழாவும் நேற்று முன்தினம் (21) பாடசாலையின் எம்.சி. பஹார்தீன் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்...

## இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

டீ20 சுற்றின் 15ஆவது போட்டியாக ஹோர்பட் , பெலாரைவ் ஓவல் மைதானத்தில் இலங்கை எதிர் அயர்லாந்து அணிகள் மோதிக்கொண்டன.

நாணய சுழற்சியில் அயர்லாந்து அணி வெற்றிப் பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் களமிறங்கிய அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 128 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்ப்பில் மஹீஷ் திக்ஷன மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர்.

அதனடிப்படையில் இலங்கை அணிக்கு 129 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 15 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 133 ஓட்டங்களை பெற்று போட்டியில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் குசல் மென்டிஸ் 68 ஓட்டங்களையும், சரித் 31 ஓட்டங்களையும் மற்றும் தனஞ்சன டி சில்வா 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அதனடிப்படையில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் இந்திய அணி 4விக்கெட்டுக்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது.

இன்றைய இரண்டாவது போட்டி டீ20 சுற்றின் 16 ஆவது போட்டியாக மெல்போர்ன் விளையாட்டரங்கில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இந்தியா எதிர் பாகிஸ்தான் அணிகள் மோதிக்கொண்டன.

முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் இந்தியா அணி சார்ப்பில் ஆர்ஸ்தீப் சிங்க் மற்றும் ஹார்த்திக் பாண்டியா ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர்.

அதனடிப்படையில் இந்தியா அணிக்கு 160 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி இறுதிப்பந்தில் இலக்கை எட்டி போட்டியில் வெற்றி பெற்றது.

34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்திருந்த இந்தியா அணிக்கு ஹார்திக் பாண்டியா கோலி இணைப்பு இந்தியா அணியின் வெற்றியை உறுதி செய்தது.

துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் விராட் கோலி 82 ஓட்டங்களை விலாசி அணியின் வெற்றிக்கு பங்கு சேர்த்தார்.

அதனடிப்படையில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியா அணி அபார வெற்றி பெற்றது.

## நீர்கொழும்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இரண்டு இளைஞர்கள் வீதியில் பயணித்த பெண் ஒருவரிடமிருந்து தங்கச் சங்கலியைப் பறித்து, தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

இதன்போது, பொலிஸார் அதனைத் தடுப்பதற்கு முயற்சித்த போது, பொலிஸாரை நோக்கிச் சந்தேகநபர்கள், துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து சந்தேகநபர்களை நோக்கிப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 22 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தநிலையில் 25 வயதுடைய மற்றுமொரு சந்தேகநபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.



மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத் தலைவர் /ஹஸைன் முஹம்மத் புதிய சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் நாஸர் அல்தஸம் அல்காந்தி அவர்களைச் சந்தித்து டைடானிக் போது எடுக்கப்பட்ட படம்.








MEDIA DIRECTORY – 2022

வீட்டிலிருந்தவாறே தபால் மூலம் பெறுங்கள்!




Details of President, President, Parliament, Ministeries, Parliament Members, Provincial Council, Local Authorities, Political Parties, Foreign Mission in Sri Lanka, Honorary Consular Corps, International Organizations, Defence, Religious & Cultural Bodies, Universities, Media Orgazina-tions, Newspaper, Radios, Televisions, SLMMF Members

**Price: 1,100/-** (Book 900/- + Postal 200/-)

Sri Laka Muslim Media Forum
BOC, Lake House Branch, A/C No: 3268511

1,100 ரூபா பணத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வங்கி கணக்கில் வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டை 0772612288 இலக்கத்துக்கு WhatsApp அனுப்புங்கள்.

## அரங்கம்

### பஷிலுக்கு பாராளுமன்றம் வருவதற்கு தடை போட்ட 22

1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அறிமுகப்படுத்திய அரசியலமைப்புத் திட்டத்தில் முக்கிய மாற்றங்களை அறிமுகப்படுத்தும் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் வெள்ளியன்று நிறைவேற்றப்பட்டது.

174 வாக்குகளால் இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது. பசில் ராஜக்ஷ அணியினரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அந்த அணியைச் சேர்ந்த பல எம்.பிக்கள் பிரசன்னமாகாது வாக்கெடுப்பு இடம்பெற்றது. மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜக்ஷ, அரச தரப்பு பிரதம கொரடா பிரசன்ன ரணதுங்க உட்பட மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் விவாதத்தில் பங்குபற்றாமை வெள்ளியன்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வெட்டித்தென்படும் நிகழ்வாகும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட. மற்றும் அரசிலிருந்து வெளியேறி சுயேற்சையாக

இப்போது இதை பாராளுமன்றத்தை கலைப்பது நாலறை வருடத்தில் என்று கூறப்பபட்டுள்ளதா? சரத் வீரசேகரவின் இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் விஜேதாஸ, இதனை இப்போது நாலறை வருடங்களாக மாற்ற முடியாது என சட்டமா அதிபர் கூறியிருக்கின்றார் என்று பதிலளித்தார். அப்போது குறிக்கிட்ட கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே அப்படியாயின் நாம் ஏன் வாக்களிக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார். இவற்றை எல்லாம் செவிமடுத்த பின் மொட்டுக் கட்சியின் செயலாளர் காரியவசம் இருக்கும் யாப்பு மோசம் என்றால் நாம் ஏன் துண்டு துண்டாக யாப்பினை பிரிக்கக்கூடாது எனத் தெரிவித்தார். இல்லை இல்லை ஜெனீவாவையல்ல நான் கூறியது ஐ.எம்.எப்.பினை என்று அலி சப்ரி கூறினார். ஐ.எம். எப். பிரேரணை யாவற்றையும் நான் வாசித்தேன். அதிலம் அரசியல் யாப்பு பற்றி குறிப்பட்டிருக்கவில்லை என வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

விவாதம் தொடரும்போது மஹிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தை கலைப்பது செயற்படுபவர்கள். எனவே அவர்களை தொட்டுக் கட்சியைப் பிரதிநிதித்துவம் படுத்துபவரா என இனியும் கருதமுடியாது என சாகல காரியவசம் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார். மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையை மாற்றுமாறு ஜனாதிபதியிடம் கூறியுள்ளார். மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையை மாற்றுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் மொட்டுக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி கோதா நியமித்த அமைச்சரவையைத் தொடர்வது அர்த்தமற்றது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதேநேரம் அமைச்சரவை மாற்றம் பற்றி கோதாவும் சாகல ரத்நாயக்க ஊடக தகவல் ஒன்றைப் பறிமாறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எந்த வகையிலும் ஜொன்ஸ்டன், ரோஹித, பவித்ரா ஆகியோருக்கு பதவிகள் வழங்க வேண்டாம் என கோடா ரணிலிடம் தெரிவித்திருப்பதாகவும், பஷில் சமர்ப்பித்துள்ள

# வெற்றிலை வைத்து கும்பிட்டாலும் பாராளுமன்றைக் கலைக்க மாட்டேன்

## கூறுகிறார் ரணில்!

இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களது ஆதரவுடன் பிரேணை நிறைவேற்றப்பட்டது.

பிரேணைக்கு கொழும்பு மாவட்ட எம்.பி.சரத் வீரசேகர மட்டும் எதிர்த்து வாக்களித்தார்.

முன்னாள் நிதி அமைச்சர் பஷ ில் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்துக்கு சவால் விடுக்கும் ஒரு பிரேரணையாகவே இத்திருத்தம் அமைந்தள்ளது. பசில் ராஜபக்ஷ இனி தேர்தலில் போட்டியிடுவதாயின் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கைவிடவேண்டும்.

ஜனாதிபதி ரணிலைப் பொறுத்தவரை ஒரு வெற்றியாகவே இரு கருதப்படுகின்றது.

### வெற்றிலை வைத்துக் கும்பிட்டாலும் பாராளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன்

அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டம் கடந்த திங்களன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் பற்றி நிதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ விளக்கமளித்தார்.

22ஆவது அரசியல் திருத்தம் காலத்தின் தேவை என்று தெரிவித்து அமைச்சர் ராஜபக்ஷ, இதனை நிறைவேற்ற சகல உறுப்பினர்ளும் ஆதரவு வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகல காரியவசம், பிரேரணையை தமது கட்சியில் பெரும்பான்மையினர் எதிர்ப்பதினால் எல்லோரதும் ஆதரவு கிடைக்கமாட்டாது என்று தெரிவித்தார். இக்கருத்துடன் கூட்டம் பரபரப்பானது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் சபையின் முதல்வர் சுசில் பிரேமஜயந்த அடுத்த வியாழக்கிழமை 22ஆவது திருத்தச் சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதனால் இது பற்றி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ வுக்கு ஏதும் விளக்கமளிப்பதற்கு இருக்கின்றதா எனக் கேள்வி எழுப்பினார்.

இல்லை எனக்கு ஏதும் விஷேடமாக சொல்வதற்கில்லை. நான் பலமுறை திருத்தங்கள் பற்றி விளக்கியுள்ளேன் என்று அமைச்சர் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சரின் இந்த உரை மொட்டுக் கட்சி உறப்பினர்கள் பெரும்பாலானோருக்கு கோப ஷேத்தை ஏற்படுத்தியது. பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எழுந்து அவருவருக்கு கூறுவதற்கு ஒன்றுமில்லாதபோதும் எமக்கு கூறுவதற்கு விடயங்கள் உள்ளன என்று தெரிவித்தார். நான் 20ஆவது திருத்தத்துக்கும் வாக்களித்தேன். 19க்கும் வாக்களித்தேன். இந்த திருத்தத்துக்கு நான் வாக்களிக்கமாட்டேன். ஜனாதிபதியை விழித்துக் கூறினார்.

தொடர்பாக ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார். பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரதும் பிரச்சினையாக இருந்தது பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக யாவும் வததந்தியாகும். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி நான் இப்படிச் சொல்லவா? நீங்கள் வெற்றிலை எடுத்து வந்து வணங்கிக் கேட்டாலும்



பாராளுமன்றத்தைகட் கலைக்க மாட்டேன் என்றார். ருணிலின் இந்தப் பதில் எல்லோருக்கும் இனிப்பான செய்தியாக அமைந்தது.

இதற்குப் பதிலளித்த விஜேதாஸ ராஜபக்ஷ, இந்தத் திருத்தங்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே கொண்டுவந்தார். அதனையே கட்சித் தலைவர்கள் அங்கீகரித்து முன்னெடுத்தார்கள் என்று கூறினார்.

### ஜொன்ஸ்டன் பவித்ரா ரோஹிதவுக்கு அமைச்சர் பதவி வழுங்க வேண்டாம் - கோத்தா

அமைச்சரவையை விரிவாக்குவது பற்றி பல மாதங்களாகப் பேசப்பட்ட போதும் இதுவரை இது இடம்பெறாதது குறித்து மொட்டுக் கட்சி முக்கியஸ்ர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. மொட்டுக் கட்சி முக்கியஸ்தர் ராபஜபக்ஷ, ஜொன்சன் பெர்னான்டோ, ரோஹித அபேவர்தன, மஹிந்தானந்த, பவித்ரா, காமினி லொக்குகே, எஸ். பி.திசாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன ஆகிய பத்துப் பேருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குமாறும் சிபாரிசு செய்துள்ள போதும் இதில் சிலருக்கு அமைச்சர் பதவி வழங்குவது குறித்து ஜனாதிபதி இரு மனதுடன் இருப்பதாக மொட்டுக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக மொட்டுக் கட்சியின் செயலாளர் சகல காரியவசம் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தற்போதுள்ள அமைச்சரவை கோதபாய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது. இப்போதுள்ள சில அமைச்சர்கள் மொட்டுக் கட்சியின் கொள்கையை நிராகரித்துச்

பட்டியலில் நான்கு ஐந்து பேருக்கு அமைச்சர் பதவி வழங்குவதில்லை என்ற கடுமையான நிலைப்பாட்டில் ரணில் இதுவரை இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ரணில் தான் பொறுத்தமான தலைவர் என்கிறார்கள் வெளிநாட்டு முக்கியஸ்தர்கள்

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டுப் பிரமுகர்கள் பலரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி சாதகமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். ஜனாதிபதியின் சுற்றாடல் ஆலோசகராக நியமனம் பெற்றுள்ள முன்னாள் சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தகுதியாக ஒருவர் ரணில் விக்கிரமசிங்க எனத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் சில தினங்களுக்கு முன் விஜயம் செய்த அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லுவும் இலங்கையின் பொருளாதாரத்தை வென்றெடுக்கக்கூடியவர் ரணில் விக்கிரமசிங்கவே எனத் தெரிவித்துள்ளார். இதேநேரம் சொல்ஹெய்ம் காலநிலை தொடர்பான ஆலோசகராக நியமிக்கப்பட்டது குறித்து ஜாதிக பிவிதுர ஹெலஉருமயவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சேர்ஹெய்முக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது தமிழ் தரப்புடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கே எனத் தெரிவித்துள்ளார்.

### தேரரின் இறுதிக் கிரியை அரச அனுசரணை நிராகரிப்பு பாராட்டுக்குரியது

உபஸ்தானாதிபதி பல்லேகம ஸ்ரீநிவாஸ் தேரரின் இறுதிக் கிரியைக்கு அரச அனுசரனை வழங்குவதனை ஏற்க மறுத்த செய்தி அனுராதபுரத்திலிருந்து வெளியாகியுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் மரணித்த பல்லேகம ஸ்ரீநிவாஸ மகாநாயக்க தேரரின் இறுதிக் கிரியையை அரச அனுசரனையுடன் நடாத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்திருந்தார். நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேரின் இறுதிக் கிரியைகளுக்காக அரச பணம் செலவு செய்யப்படுகின்றதனை தமது பீடம் விரும்பவில்லை என பதில் உப ஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்ன தேரர் தெரிவித்தார். அரச அனுசரனையை வழங்க முன்வந்துள்ளனர். ஆனால் அரச கௌரவமல்ல என்று பல்லேகம ஹேமரத்ன ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில் மறைந்த தேரரின் இறுதிக் கிரியைக்கு அரச பணத்தைச் செலவு செய்வது அவருக்குச் செய்யும் அகௌரவம் என்பதனால் அரச அனுசரனையை நிராகரிக்கின்றோம் என்று ஹேமரத்ன தேரர் தெரிவித்தார்.

### சவோயில் மஹிந்த ராஜபக்ஷ சிரந்தியுடன் பார்த்த படம்

கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலை அடிப்படையாக வைத்து மணிரத்னம் தயாரித்த திரைப்படம் இன்று தமிழ் பேசும் உலகில் பேசும் ஒரு திரைப்படமாக உள்ளது. ஊருக்கு ஊர் பேசப்படும் ஒரு படைப்பாக மாறியுள்ள பொன்னியின் செல்வம் படத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன் துணைவி சிரந்தி சகிதம் வெள்ளவத்தை சவோய் திரையரங்கிற்கு சென்று பார்த்துள்ளார். இது தொடர்பான செய்தி படத்துடன் ஊடகங்களில் வெளிவந்ததையடுத்து சிங்கள ரசிகர்கள் இப்படம் பற்றி அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர். ஐந்து பாகங்களைக் கொண்ட கல்கியின் பொன்னியின் செல்வன் நாவல் இலங்கை - இந்திய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது.

தஞ்சையை ஆளும் சுந்தரச் சோழர் உடல் நலமன்றி இருக்கிறார். அடுத்து முடி சூட அவர் மகன்கள் ஆதித்ய கரிகாலனும், (விக்ரம்) அருண்மொழி வர்மனும் (ஜெயம்ரவி) இருக்கிறார்கள். கூடவே மகள் குந்தவையும் (த்ரிஷா) பெரிய பழுவேட்டரையர் (சரத்குமார்) தலைமையில் சிற்றரசர் மகன் மதுசாந்தனை (ரகுமான்) அரியணையில் அமர்த்தத் திட்டம் தீட்டுகின்றது. தன் தந்தைக்கு எதிராகச் சதி நடப்பதை அறியும் ஆதித்ய கரிகாலன் அந்தச் சதி என்ன என்பதனை அறியவும் வந்தியத்தேவனை (கார்த்தி) தூ தப்புகிறார். இலங்கையில் இருக்கும் அருள் மொழிவர்மனை அழைத்து வரவும் முயற்சி நடக்கிறது. இது ஒருபுறமிருக்க சோழ வம்சத்தை அழித்தொழிக்கும் பாண்டியன் ஆபத்துதலங்களின் தொடர்பில் இருக்கிறார். பெரிய பழுவேட்டைரையரின் இளம் மனைவி நந்தினி (ஐஸ்வர்யாராய்) இந்தச் சூழலில் அடுத்து என்ன நடக்கிறது என்பதுதான் பொன்னியின் செல்வன் முதல் பாகம்.

(நஸ்மின்)

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 OCTOBER 23 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# திலினி பிரியமாலியிடம் ..

நாட்டின் பிரபல தனவந்தர்களை ஏமாற்றி பில்லியன் கணக்கில் ரூபாய்களை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள திலினி பிரியமாலி பற்றி நாளுக்கு நாள் புதுப்புது தகவல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

திலினி பிரயமாலியிடம் முதலீடு செய்தவர்களின் 70% சதவீதமானோர் அதாவது மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் முஸ்லிம்கள் என சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விவாதத்தில் முஸ்லிம் சமூகம் எங்கே சென்று கொண்டிருக்கின்றது என்ற கேள்வி சமூகத்தில் எழுப்பப்படுகின்றது.

நடந்திருக்கும் இந்த நிதி மோசடி பெரும் அழிவாகும். யாரையும் குற்றம் சாட்ட முடியாது. அநேகர் தாமதமாகவே இந்த முதலீட்டில் சம்பந்தப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் வியாபார் சமூகமாக இருந்தாலும் அண்மைக் காலமாக வியாபாரத்தில் இலகுவாகப் பொருளீட்ட வேண்டும் என்ற ஆர்வம் சமூகத்தில் ஏற்படுவதற்குக் காரணம் உள்ளார்ந்த ரீதியாக பொருளாதார மோகம், முதலாளித்துவம், சடவாத சிந்தனை என்பன சமூகத்தில் மேலோங்கி இருப்பதாகும். ஒரு சாராரிடம் எந்த வகையிலும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கருத்து சமூகத்தில் வளர்ந்து வருகின்றது.

அண்மைக் காலமாக பலர் பண பறிமாற்றம், டொலர் வியாபாரம், தங்க வியாபாரம், டீசல், பெற்றோலைப் பதுக்கி சம்பாதித்தல், உண்டியல் வியாபாரம் உட்பட பல மோசடிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அந்த நெருக்கடி மூலம் மேலே குறிப்பிட்ட வியாபாரத்தில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்க முற்பட்டுள்ளனர். இவ்வாறான வர்த்தகத்தில் ஈடுபடும் போது ஹறாம், ஹலால் விதிமுறைகளைப் பற்றி அக்கறை காட்டாது செயற்பட முற்பட்டுள்ளனர்.

இவ்வாறான சிந்தனையுள்ளவர்கள் வேறு குழுக்களால் தவறாக வழிநடத்தப்படலாம். நிதிக்கம்பனிகள் அல்லது தனி நபர்களால் இச்சந்தர்பப்த்தை பயன்படுத்தலாம். ஆதற்கான உதாரணம் திலினி பிரியமாலி சம்பவமாகும். 3000 முஸ்லிம்கள் இதில் தொடர்புப்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஆதில் ஒரு ரெும் அழிவு ஒன்றுள்ளது. சமூக பலம் மூன்று வகையில் உள்ளது. ஒன்று பொரளாதார பலம், இரண்டாவது கல்வி ரீதியிலான பலம், மூன்றாவது அரசியல் ரீதியான பலம், நான்காவதாக இந்த மூன்றும் சேர்ந்த கட்டமைப்பாகும். ஆதில் சம்பந்தப்பட்ட 3000 பேரும் ஸ்தம்பிப்பதன் மூலம் முஸ்லிம் கிராமங்களின் முன்னேற்றத்துக்கு எதிர்காலத்தில் சவாலாக அவைது தவிர்க்க முடியாதுது. ஆவர்களது சொந்த வியாபாரத்தை கட்டி எழுப்புவதும் சவாலாகவே இருக்கப் போகிந்து. சிலர் தமது வீட்டை, நகைகளை விற்று முதலீடு செய்துள்ளனர். இதற்குக் காரணம் சிறிய முயற்சியைச் செய்து பெரும் லாபம் சம்பாதிப்பதாகும். கூடுதலாக ஈடபட்டு வியாபாரத்தைச் செய்தால் இஸ்லாம் அனுமதிக்காதவைகளில் சம்பந்தப்பட அவசியமில்லை. நியாயமா வியபாரத்தைச் செய்வதன் மூலம் இஸ்லாம் அங்கீகரிக்காத வட்டி போன்றவற்றில் சம்பந்தப்படவேண்டியதில்லை. இந்த முயற்சியும் இல்லாத வியாபாரங்களில் ஈடுபட்டால் வசதியான சூழில் இருந்து கொண்டு நாம் இாப விகிதாசாரங்களை எதிர்பார்த்தால் அது சூதாகவோ, வட்டியாகவோ அமையும். இவ்வாறான வியாபாரங்களை சமூகத்தில் நியாயப்படுத்த முயற்சிக்கும் ஒரு போக்கினைக் காண்கின்றொம். உலமாக்களும் இவற்றைப் பார்த்தக் கொண்டு மௌனம் காட்டுகிறார்பன். பிழையான செயற்பாடுகளிலிருடுபடுவோர் குறித்து சமூகம் அளிக்கும் அங்கீகாரமும் இவ்வாறான செயற்பாடுகளில் அச்சம் பலனின்றி ஈடுபடுகிறாரக்ள்.

வியாபார சமூகம் என்ற முகவரியில் வாழும் முஸ்லிம்கள் முன்மாதிரிமிக்க வர்த்தக முயற்சிகளை ஆரம்பித்து செயற்படுவது முக்கியமானது.

இவ்வாறானசெயற்பாடுகளைச் சமூகத்துக்கு அவப் பெயர் சுமத்தப்படுகின்றது. ஏற்கனவே முஸ்லிம் சமூகத்தை கழுகுப் பார்வையில் பார்க்கும் ஒரு சூழ்நிலை இருக்கின்ற நிலையில் இவ்வாறான மோசடி வியாபாரங்களில் ஈடபடுவது முஸ்லிம் சமூகத்துக்கு அவப் பெயரையே ஏற்படுத்தும்.

# “தவறான தகவல்களுக்கு எதிராவோம்” ஊடகத்துறைசார்ந்தோருக்கு பயிற்சி



(ராபி சிஹாப்தீன்)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் (ளுடுீஜ) ஏற்பாட்டில், ஊகுடுஜ மற்றும் ஆலுவுஉ ழுளு டுயுடீளு இன் அனுசரணையில், ”தவறான தகவல்களுக்கு எதிராவோம்” எனும் தலைப்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக துறைசார்ந்தோருக்கான பயிற்சி இம்மாதம் கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு சின்னமன் லேக்சைட் (Cinnamon Lakeside) ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கையின் ஊடகங்களில் தவறான தகவல்கள் பரவுவது மற்றும் அதன் தாக்கம், தவறான தகவல்களை அடையாளம் கண்டு அதற்கு பதிலளிப்பது, தவறான தகவல்களைப் அறிக்கையிடுதல் மற்றும் தவறான தகவல் வலையமைப்புகளுக்கு முகங்கொடுத்து இணைய பாதுகாப்பை அதிகரிப்பது, தவறான தகவல்களுக்கு எதிராக ஒன்றிணைத்து செயற்படுவது குறித்து இந்த செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது.

தமிழ் மற்றும் சிங்கள மொழியில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சியில் ஆண் மற்றும் பெண் ஊடகவியலாளர்கள், ஊடக துறைசார் மாணவர்கள் உட்பட சுமார் 60 பேர் கலந்துகொண்டனர். நடைமுறைச் செயற்பாடுகளுடன் கூடிய இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பயிற்றுவிப்பாளராக ஊடக பயிற்றுவிப்பாளர் மொஹமட் பைரூஸ் தமிழ் மொழியிலும் மற்றும் கசுன் குமாரகே சிங்கள மொழியிலும் விரிவுரையுடன் பயிற்சிகளையும் வழங்கினர்.

நிகழ்ச்சியின் தொடக்க நிகழ்வில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் வெலெரி ஓவெல்லட் (Valerie Ouellette)› இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குமார் லோபஸ், மைதோஸ் லேப் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரியங் மதூர் மற்றும் நிகழ்ச்சி முகாமையாளர் பைசா செய்ட் ஆகியோர் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச அபிவிருத்திக்குழு தலைவராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே அவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது.இதற்கான நியமனக் கடிதத்தை பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்து நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

(தலவாக்கலை பி.கேதீஸ்)

# தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பூப்பந்து வெற்றிக்கிண்ணம்!



(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட உபவேந்தர் பூப்பந்து வெற்றிக்கிண்ண சுற்று போட்டியின் இறுதிப் போட்டியில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உத்தியோகத்தர் பூப்பந்து அணியினை தோற்கடித்து, ஊவா வெல்லச பல்கலைக் கழக அணி சம்பியனாக தெரிவானது.

இறுதிப் போட்டி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உத்தியோகத்தர் பூப்பந்து அணிக்கும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக உத்தியோகத்தர் பூப்பந்து அணிகளுக்குமிடையில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியானது (18) ம் திகதி செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக உள்ளக பூப்பந்து மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் கொரோனா தொற்றுப்பரவல் போன்ற காரணங்களால் இறுதிப் போட்டியை நடத்த முடியாமையினால் தள்ளிப்போன நிலையில் நேற்று குறித்த போட்டி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டியில் மொத்தமாக (13) சுற்றில் ஊவா வெல்லெச பல்கலைக்கழக உத்தியோகத்தர் பூப்பந்து அணி (8) புள்ளிகளையும், தென்கிழக்குப் பல்கலைக்கழக உத்தியோகத்தர் அணி( 5) புள்ளிகளையும் பெற்ற நிலையில், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

வெற்றிபெற்ற ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக உத்தியோகத்தர் பூப்பந்து அணிக்கான வெற்றிக்கிண்ணத்தை பிரதம அதிதி வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# குச்சவெளி பிரதேசத்தை பாதுகாக்க அனைவரும் இணையவேண்டும்

## தவிசாளர் முபாறக் வேண்டுகோள்!

(பைஷல் இஸ்மாயில்)

பருவமழையால் பாதிக்கப்படும் புல்மோட்டை அறபாத்நகர், முதலாம் வட்டாரம், நான்காம் வட்டாரம் மற்றும் இக்பால் நகர் போன்ற பகுதிகள் அதிகமாக பாதிக்கப்படுவதாகவும், இதனை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும் என்று குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் அனர்த்த முகாமைத்துவக் கூட்டம் செயலக கலாச்சார மண்டபத்தில் (21) இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நாட்டில் பெய்துவரும் பருவமழை காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் எமது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதை நாம் அறிகிறோம். அப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களில் இருந்து எமது பிரதேசம் பாதுக்கப்பட வேண்டும்.

அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாமே எடுக்க வேண்டும். அதன் ஆரம்ப கட்டமாக



பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியன இணைந்து அதற்கு ஒரு குழுவினர் நியமிக்கப்பட்டு ஒருங்கிணைந்த நடவடிக்கையினை முன்னெடுப்பது அவசியமாகும் என்று தவிசாளர் சுட்டிக்காட்டினார்.

வடிகால்கள் துப்பரவு செய்தல், மழை நீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் சிரமதானப் பணியினை முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுதல் போன்ற விடயங்களை காலதாமதமின்றி செய்கின்ற அதேவேளை, பொதுமக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வுகளை கட்டாயம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ள வேண்டுமென தவிசாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, புல்மோட்டை கொக்குளாய் முகத்துவாரம் ஊடாக முல்லைத்தீவுக்கு இயங்கும் படகுச் சேவையை மிகுந்த அவதானத்துடன் இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கடலுக்குச் செல்லும் மீனவர்களும் மிக அவதானமாக தங்களின் மீன்பிடித் தொழிலில் ஈடுபட வேண்டும். இதில் ஈடுபடுபவர்களுக்குரிய அறிவுறுத்தல்களை வழங்குவது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கான குழுவினர் எமது பிரதேசத்தை பாதுகாக்க எந்நேரத்திலும் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், குச்சவெளி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், முப்படைகளின் அதிகாரிகள், சமூக சேவையாளர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.




NEWS PLUS இல்,

உங்கள் நிறுவனங்களை சிறப்பு பக்கத்தில் பிரசுரிக்க நாங்கள் தயாராக உள்ளோம்....

பாடசாலைகள் அறிமுகம்

தனியார் நிறுவனங்கள், Societies, sports club போன்றவற்றின் அறிமுகங்கள்

வியாபார நிலையங்களின் விஷேட நடைமுறைகள்

Newsplus மின்னிதழில் உங்கள் தரமான விஷேட விடயங்களை இலகுவாக பிரசுரியுங்கள்.....



Collaborate with Publish Partner... SIYANE NEWS

உங்கள் அடையாளங்களை பிரபல்யப்படுத்துங்கள்

தொடர்புகளுக்கு: பயனை இன்றே அனுபவியுங்கள்...

077 261 2288 | 077 87 51 032 | 075 40 10 238

www.siyanenews.com | www.newsplus.lk


# மரணித்தவர்களின் அடக்கஸ்தலங்களை தரிசிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் தொடர்பாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் வழிகாட்டல்!

மரணித்தவர்களின் அடக்கஸ்தலங்களை தரிசிப்பது மற்றும் அதன் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் தொடர்பாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அறிக்கை வெளியிட்டுள்ளது.

அடக்கஸ்தலங்களை எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் தரிசிப்பதற்கு மார்க்கத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது அதற்கென குறிப்பாக நாட்களும் நேரமும் கிடையாது என உலமா சபை தெரிவித்துள்ளது.

பொது அடக்கஸ்தலங்கள், மற்றும் அவ்லியாக்கள்,ஸாலிஹீன்களின் அடக்கஸ்தலங்களை தரிசிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் பின்வருமாறு,

1 .தரிசிக்கச் செல்லும் போது ஷரிஅத்துக்கு உட்பட்ட ஒழுக்கமான ஆடை அணிந்திருத்தல்.

2. உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் அடக்கஸ்தலங்களை தரிசிக்கச் செல்வதை தவிர்த்தல்.

3. தரிசிக்கும் பொழுது ஒப்பாரி வைத்து அழுவதை தவிர்த்தல்.

4. தரிசிக்கும் பொழுது வீணான பேச்சுக்களைத் தவிர்த்தல்.

5. அடக்கம் செய்யப்பட்டவர்களுக்கு ஸலாம் சொல்லி அவர்களுக்காக துஆ செய்தல். ஸலாம் சொல்லும் போதும் துஆ கேட்கும்போதும் ஹதீஸ்களில் வந்துள்ளதை கூறுதல்.

6. தரிசிக்கும் பொழுது அல்குர்ஆனின் சில பகுதிகளை ஓதி அடக்கம் செய்யப்பட்டவர்களுக்காக துஆச் செய்தல்,அவ்வாறு செய்வது மார்க்கத்தில் விரும்பத்தக்கதாகும்.

7. அவ்லியாக்கள் ஸாலிஹீன்கள் என நம்பப்படுபவர்களை தரிசிக்கும் பொழுது அல்லாஹ்விடத்தில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் மாத்திரம் அவர்களைத் தரிசித்தல் .மேலும், அவர்களுக்கு ஸ லாம் கூறல்.

8. நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களின் சங்கையான அடக்க ஸ்தலத்ததை தரிசிக்கும் பொழுது நபி (ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம்) அவர்களை உயிருடன் சந்திக்கும் போது கண்ணியமாக எவ்வாறு தூர நின்று சந்திப்போமோ அவ்வாறே அவர்களது அடக்கஸ்தலத்திலும் கண்ணியமான முறையில் தூர நின்று தரிசிக்க வேண்டும் என இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் மஜ்மூஃ எனும் தனது கிரந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

9. அடக்கஸ்தலங்களை தரிசிக்கும் பொழுது அதனை சுற்றி வலம் வராமல் அடக்கப்பட்ட வரை முன்னோக்கி நின்ற நிலையிலோ அல்லது உட்கார்ந்த நிலையிலோ தரிசித்தல்.

10. அடக்கஸ்தலங்களை தரிசிக்கும் பொழுது கப்ருகளை மிதிக்காமல் இருத்தல். கப்ருகளை மிதிப்பது வெறுக்கத் தக்கதாகும்.

11.பெண்கள் அடக்கஸ்தலங்களை தரிசிக்க நேரிட்டால் ஷரீஅத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள ஆடைகளை அணிந்து செல்லல்.ஆண் ,பெண் கலப்பை தவிர்த்தல்.என்பவற்றுடன் மேற்கூறப்பட்ட ஒழுங்குமுறைகளை பேணுவது அவசியமாகும். பெண்கள் அடக்கஸ்தலங்களை தரிசிக்கும் பொழுது ஃபித்னா ஏற்படும் என அஞ்சப்படுமானால் பெண்கள் அடக்கஸ்தலங்களைத் தரிசிப்பதைத் தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

(அப்ரா அன்சார்)

Supplement Main Sponsor: HOME NEEDS & BIG 4




# மெற்ரோபொலிட்டன் ஸஹ்ரியன் பிரிமியர் லீக் சீசன்-02



எஸ்.அஷ்ரப்கான

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் அமைப்பான சஹ்ரியன் பழைய நண்பர்கள் சம்மேளனத்தின் (Zofa) ஏற்பாட்டில் இடம் பெறும் மெற்ரோபொலிட்டன் ஸஹ்ரியன் பிரிமியர் லீக் சீசன்-02 கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மைதானத்தில் (21) வெள்ளிக்கிழமை மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியது.

ஸாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து 29 அணிகள் பங்கு கொள்ளும் 07 ஓவர்கள் கொண்ட குறித்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்விற்கு, பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெற்றோபொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப், ,கௌரவ அதிதியாக சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரி என்.எம்.மலிக் அவர்களும், விசேட அதிதிகளாக சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ். எல்.சம்சுதீன்,

முன்னாள் அதிபர் முஹம்மட் உட்பட ஏற்பாட்டுக் குழுவினர்களும் கலந்து கொண்டனர்.

வெள்ளியன்று (21) ஆரம்பமான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை 24 ம் திகதி வரை இறுதி போட்டியுடன் மெற்ரோபொலிடன் ஸஹிரியன் பிரிமியர் லீக் சீசன்-02 நிறைவடையவுள்ளது .

மெற்ரோபொலிடன் ஸஹ்ரியன் பிரிமியர் லீக் சீசன்-02 போட்டியில் சம்பியன்களாக தெரிவு செய்யப்படும் அணிக்கு 25,000 ரூபா பணப்பரிசும் சாம்பியன் கிண்ணமும், இரண்டாம் இடத்தைப்பெறும் அணிக்கு 15,000 ரூபா பணப்பரிசும் கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

இங்கு கல்முனை ஸாஹிராக் கல்லூரியின் 04 மாணவர்களுக்கு மெற்றோ பொலிட்டன் கல்லூரியில் இலவசமாக கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் மெற்றொ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளர் கலாநிதி சிராஸ் மீராசாஹிபின் கரங்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு மிக பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இப்போட்டிகள், இப் பாடசாலையின் வரலாற்றில் முதலாவது தடவையாக கோலாகல கிரிக்கெட் திருவிழாவாக கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் இரசனை விருந்து படைத்துள்ளது என்பதுடன், கிரிக்கெட் ரசிகர்களின் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

29 பழைய மாணவர்களின் ஸஹ்ரியன் அணியினர் இங்கு களம் கண்டுள்ளனர் இச் சுற்றுப் போட்டி ஒரு சர்வதேச போட்டிகளுக்கு ஈடாக நடைபெற்று வருகின்றமை விசேட அம்சமாகும்.






























# “அரசியலமைப்பின் 20வது திருத்தமே நாட்டின் தற்போதைய சீரழிவுக்கு பிரதான காரணம்”



## – ரிஷாட் எம்.பி காட்டம்!

நாட்டின் தற்போதைய பொருளாதார சீரழிவுக்கும் மக்கள் பசி, பட்டினியால் வாடுவதற்கும், வீதிகளில் இறங்கி அன்றாடத் தேவைகளுக்காக போராடுவதற்கும் மூல காரணம் அரசியலமைப்பின் 20 வது திருத்தம் எனவும், சொந்த நலனை பாதுகாப்பதற்காகவே அவ்வாறான திருத்தத்தை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் அரசாங்கம் கொண்டு வந்தது எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இன்றைய தினம் (21) பாராளுமன்றில் அரசியலமைப்பின் 22 ஆம் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

“அரசியலமைப்பின் 22 வது திருத்த விவாதத்தில் பேச சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அரசியலமைப்பின் 20 வது திருத்தம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபொழுது எனக்கு பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் அப்பொழுது சிறையிலிருந்து அழைத்து வரப்பட்டேன். ஏனெனில், அப்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கம் என்மீது அநியாயமாக ஒரு குற்றத்தை சுமத்தி, என்னை சிறையில் அடைத்திருந்தது. அதாவது, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்ந்த மக்களை மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு வாக்களிப்பதற்காக, அரச வாகனத்தில் நான் அழைத்து சென்றதாகவே அவர்களின் குற்றச்சாட்டு இருந்தது. இவ்வாறான அபாண்டமான குற்றச்சாட்டிலிருந்து நீதிமன்றம் அண்மையில் என்னை விடுவித்து நிரபராதி என தீர்ப்பளித்தது.

என்னை கைது செய்து மின்சாரம் இல்லாத, நீர் வசதி இல்லாத ஒரு இருட்டறையில் அடைத்துவைத்தார்கள். பாய், தலையணை கூட இல்லாத நிலையில், நுளம்புக்கடிக்குள் இருக்க வேண்டிய ஒரு மோசமான சூழலை உருவாக்கினார்கள். நான் சிறையில் இருந்தபோது விடுக்கப்பட்ட கடுமையான அழுத்தங்கள் காரணமாகவே, என்னை பாராளுமன்றத்துக்கு அழைத்து வந்தனர். அந்த சூழலில்தான் 20 வது திருத்தம் நிறைவேறியது.

கோட்டாபய அரசாங்கம், தமது அதிகார மமதையின் உச்சத்தை வெளிப்படுத்தியதன் காரணமாகவே, அவரது கட்சி இந்தக் குறுகிய காலத்தில் சின்னாபின்னமாகி, சீரழிந்து பல கூறுகளாக பிரிந்துகிடக்கின்றது. இந்த திருத்தத்தை அவர்கள் எதற்காக கொண்டு வந்தனரோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. 19 வது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரம் போதாதென்று, இன்னும் அதிகாரத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலும், சர்வாதிகாரியாக செயற்பட வேண்டும் என்று விரும்பிய நிலையிலும் அது நடக்கவில்லை.

20 வது திருத்தம் இந்த நாட்டுக்கு ஒரு சாபக்கேடு. அதன் விளைவுதான் இந்த நாடு இரண்டு வருட காலத்துக்குள் பொருளாதாரத்தில் சீரழிந்து, சுமார் 82 சதவீதமான மக்கள் பசியிலும் பட்டினியிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலை தற்பொழுது ஏற்பட்டிருக்கின்றது. பல பில்லியன் டொலர் வெளிநாடுகளுக்கு கடன் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டிலே டொலர் இல்லை. எரிபொருள் இல்லை. இதனால் வாகனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகமே நடைபெறுகின்றது.

மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் வசதி இல்லை. விவசாயிகளும் மீனவர்களும் சீரழிந்துபோயுள்ளனர். ஜனாதிபதி எதேச்சாதிகாரமாக எடுத்த பிழையான விவசாயக் கொள்கையினால், நாட்டில் உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டது. இவ்வாறான கஷ்டங்களுக்கு எல்லாம் 20 வது திருத்தமே அடிப்படைக் காரணமாக இருக்கின்றது.

இவ்வாறானதொரு திருத்தத்தைக் கொண்டுவந்து, நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றவுமில்லை. வெளிநாட்டுக் கடனை அடைக்கவுமில்லை. முறையான திட்டமிடலோ, சரியான கொள்கையோ இல்லாத கோட்டாவின் அரசாங்கத்தினால், நாடு அதலபாதாளத்திற்கு சென்றுவிட்டது.

இப்போது சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட வேண்டியுள்ளது. 1991 ஆம் ஆண்டு இந்தியாவிலும் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது. எனினும், அவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றார்கள். கைத்தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் ஏனைய ஏற்றுமதி, இறக்குமதி துறையிலும் முறையான கொள்கைகளை வகுத்தனர். இதனால், அந்த நாடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. ஆனால், நமது நாட்டிலே ஆட்சிக்கு வருபவர்கள் சாகும்வரை ஆட்சியில் இருக்க வேண்டும் என நினைக்கின்றனர். தமது கட்சியையும் குடும்பத்தையும் வளர்க்க வேண்டும் என்பதற்காக, இவ்வாறான அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை கொண்டுவந்தனர். அதன் விளைவையே நாம் அனுபவிக்கின்றோம்.

தற்போது இந்த நாட்டில் எவருமே முதலீடுகளை செய்ய விரும்புகிறார்கள் இல்லை. இருக்கின்ற வெளிநாட்டு நிறுவனங்கள் கூட மூடிவிட்டு செல்லும் நிலையிலேயே இருக்கின்றது. எமது நாடு எதிர்காலத்தில் கைத்தொழிற் துறையில் மிகமோசமான வீழ்ச்சியை அடையும் என எதிர்வுகூறப்படுகிறது. உள்நாட்டில் உள்ள கைத்தொழிற்சாலைகளை மூடவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது. வரிகளை செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர். வர்த்தகர்களில் பலர் நாட்டை விட்டுச் செல்லப் போவதாகக் கூறுகின்றனர்.

இந்த மோசமான நிலைக்கு கடந்தகால ஆட்சியாளர்களே காரணம். இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்குகளைக் கொள்ளையடித்தனர். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் மீது குறிவைத்தனர். சஹ்றான் என்ற கயவனின் குண்டுத் தாக்குதல்களை முஸ்லிம்களுடன் தொடர்புபடுத்தி, முஸ்லிம் சமூகத்தை பாடாய்ப்படுத்தினர். எனினும், குண்டுத்தாக்குதலின் பின்னால் இருந்த சக்தி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், துறைசார் நிபுணர்கள் என அனைவர் மீதும் பழி சுமத்தி, அவர்களை குறிவைத்து மோசமான பிரச்சாரத்தை முன்னெடுத்து, சிங்கள மக்களை ஏமாற்றி 69 இலட்சம் வாக்குகளை அபகரித்தனர். பின்னர், பொதுத் தேர்தலில் 62 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறன கபடத்தன செயற்பாடுகளினால்தான் அவர்களினால் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியவில்லை. ஜனாதிபதி, பிரதமர், முக்கிய அமைச்சர்கள் எல்லாம் மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர். நாட்டைப் பற்றி சிந்திக்காததினால்தான் இவ்வாறானதொரு இழிவான நிலைக்கு தள்ளப்பட்டனர். இனியும் இவ்வாறான நயவஞ்சகர்களிடம் மக்கள் ஏமாறக்கூடாது. பொதுச் சொத்துக்களை சூறையாட வரும் இவ்வாறான இனவாதிகளை மக்கள் அங்கீகரிக்கக் கூடாது. இவ்வாறானவர்களை அங்கீகரிக்கின்ற நிலையில் இருந்து மக்கள் மாறவில்லையாயின், இந்த நாடு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்படும்.

அரசியலமைப்பின் 22 வது திருத்தத்திற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றது. சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவதன் ஊடாக, தற்போதுள்ள மிக மோசமான நிலையிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்கும், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவியளிக்கும். அத்துடன், இந்த நாட்டில் வாழும் மக்கள் ஜனநாயகத்தை மதித்து நடப்பதற்கும் இது வழிவகுக்கும் என நம்புகின்றோம்.

எனவே, இந்த அரசியலமைப்பின் 22 வது திருத்தத்தைக் கொண்டுவந்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அவர்களுக்கும், ஜனாதிபதி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்” என்றார்.

# ஒளிமயமான நாட்டுக்காக தீபாவளியில் பிரார்த்திப்போம்

## எதிர்கட்சி தலைவரின் தீபாவளி வாழ்த்து!



“வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும்” பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.

இந்துக்கள் இத்தினத்தில் எண்ணெய் வைத்து,நீராடி, புத்தாடை அணிந்து,ஆலய தரிசனம் செய்வதுடன், ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தீபங்கள் ஏற்றி வழிபடுவார்கள். அத்துடன் பெரியோர்களை வணங்கி,பரிசுப் பொருட்கள் பரிமாறி, பட்டாசு கொளுத்தி, உறவினர்களுடன் இனிப்பான சிற்றுண்டிகள் உண்டு, உலகெங்கும் உள்ள இந்துக்கள் தீபாவளிப் பண்டிகையைக் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

தீமையை தோற்கடித்து நன்மை கிடைத்த நன்னாளான இன்றைய தீபாவளி தினத்தில், நாட்டில் தற்போதுள்ள ஆபத்தான சூழ்நிலைமையை தோற்கடித்து நாட்டை கட்டியெழுப்ப நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம்.

தீபாவளிப் பண்டிகையை உலகிற்கு இருளை அகற்றி வெளிச்சம் தரும் பண்டிகையாகவும், அறியாமையை நீக்கி ஞானத்தை அளிக்கும் பண்டி கையாகவும் இந்து மக்கள் கொண்டாடு கின்றனர்.

புராதன இதிகாசங்க ளில் குறிப்பிடப் பட்ட சமூக நல்லிணக்கம்,குடும்ப உறவுகளின் முக்கியத்துவம் மற்றும் புரிந்துணர்வு ஆகியவன்றின் ஒருமித்த நாளாக தீபாவளி தினம் கொண்டாடப்படுகிறது. மேலும் இலங்கை மக்களிடையே நல்லிணக்கத்தையும்,பரஸ்பர புரிந்துணர்வையும் உருவாக்க இந்த அற்புதமான நன்னாள் பெரும் பங்களிப்பை வழங்குகிறது.

அனைவரினதும் வெறுப்பும் கோபமும் நீங்கி,மனித நல்லிணக்கம் நிறைந்த இலங்கையில் சுதந்திரமாகவும், நல்லிணக்கத்துடனும், சமாதானத்துடனும் வாழ தீபத்திருநாள்அனைவருக்கும் உறுதுணையாக அமையட்டும்.

# நவீனமயப்படுத்தப்பட்ட விவசாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் குறித்து கலந்துரையாடல்!

(இப்னு ஷெரீப்)



அம்பாறை மாவட்டத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட விவசாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையில் நேற்று (18) அம்பாறையில் நடைபெற்றது.

இங்கு விவசாயத் துறையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், அறுவடை தொழில்நுட்பம் மற்றும் மண் தொழில்நுட்பம் குறித்து கலந்துரையாடப்பட்டது. பதியத்தலாவ பிரதேச செயலகப் பிரிவில் 50 ஏக்கர் காணியில் பல்லின சோள விதைகளை உற்பத்தி செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், விதை உற்பத்தி, விதைச்சான்றிதழ், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு, பல்லின சோள விதை உற்பத்தியில் விதைப் பரிசோதனை ஆகியன தொடர்பான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளளப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் இப் பல்லின சோள விதை செய்கையினை வெற்றிகரமாக முன்னெடுக்கும் தீர்மானங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் அம்பாறை பிரதேச செயலாளர் உட்பட அம்பாறை மாவட்ட விவசாயத் தணைக்களத்தின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.





**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# தெளிவான இலக்கும் நிறைவான பயணமும்



“பயணம் தெளிவானால் பாதையும் தெளிவாகும்”

நாம் வாழ்க்கையில் இலக்குகளுடன் அல்லது எதிர்பார்ப்புகளுடன் நகர்கிறோம்.

அப்படி நகர்ந்தாலும் சிலசமயங்களில் அடைய ஆசைப்படுவதை அடைய முடியாது போகும் சந்தர்ப்பங்களை சந்திக்கிறோம்.

இன்னும் சில சமயங்களில் நம்மால் அடைய வேண்டியவற்றில் கவனம் செலுத்த முடியாமல் தவிக்கிறோம்.

சில சமயங்களில் வாழ்க்கையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

நாம் என்ன செய்கிறோம் என்பதைச் சரியாக செய்யாததனாலும்

என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாகத் தெரியாததனாலும் நாம் இவ்வாறான நிலைகளை சந்திக்க நேரிடுகிறோம்.

எங்கள் பார்வையும் பயணமும் தெளிவான நோக்கம் கொண்டதாக இருந்தால் மட்டுமே நாங்கள் திசை திரும்பாமல் போக வேண்டிய இடத்துக்கு போய் சேரலாம்.

சரியானதைச் செய்வதிலிருந்தும் பொருத்தமானதை தெரிவு செய்வதில் இருந்தும் மட்டுமே சிறந்த முடிவுகளை எடுக்கத் தேவையான அறிவு எமக்குள் உருவாகிறது. சரியானதை தெரிவுசெய்து, சரியானதைச் செய்வதன் மூலம் வரும் முடிவுகள் மிகவும் தெளிவாக இருக்கும்.

நாங்கள் தொடர்ந்து சரியானதைச் செய்வதற்கு எங்களை பழக்கப்படுத்திக் கொள்ளும்போதும் சரியானதை செய்வதற்கு தேவையான ஆதாரங்களை தேடும் போதும் எங்கள் பயணத்தின் முடிவெல்லையை மிகவும் இலகுவாக அடையலாம்.

வெற்றியை நோக்கிய பயணம் என்பது நாம் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அடுத்த படியை அடைவதற்காக உழைக்கும் செயல்முறையாகும், நாம் முன்வைக்கும் ஒவ்வொரு அடியும் எங்களைத் தூண்டி, தவறாமல் முன்னேறத்தை அடைய ஊக்குவித்துக் கொண்டே இருக்கும்.

வெற்றியை நோக்கி போகும் பயணம் ஒருபோதும் முடிவடையாத ஒரு அற்புதமான பயணம்.

அந்த பயணத்திற்கான உறுதியான அத்திவாரம் சரியானது எது, சரியானதை செய்வது எப்படி என்பதை தெரிவு செய்வதாகும்.

பயணத்தின் வெற்றி, நாம் ஏன் பயணிக்கிறோம் என்பதைப் பொறுத்தும் பயணத்தின் தன்மையை சரியாக புரிந்து கொள்வதிலும் தங்கியிருக்கிறது.

* சரியான பதிலைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் சரியான கேள்வியைக் கண்டறிவோம் என்பதில் உறுதியாக இருப்போம்....!

* போகவேண்டிய சரியான பாதையை கண்டு பிடித்து அந்தப் பாதையில் பயணம் செய்வோம்...!

* பழைய சிந்தனை முறைக்குள் விழுந்து விடாமல் வெற்றியைப் பற்றி வித்தியாசமாக சிந்திப்போம்....!

* இலக்கின்றி அலைவதற்குப் பதிலாக, நமது இலக்கையும் நோக்கத்தையும் புரிந்து பயணிப்போம்...!

”எங்கு செல்ல வேண்டும் என்று தெரியாத மாலுமிக்கு சாதகமான காற்று கிடைப்பதில்லை”

# மருத்துவ துறை மாணவிக்கு வரகாபெலவ “சிலோன் லேடிஸ் கெம்பஸ்” இல் பாராட்டு







கேகாலை மாவட்டம் வரகாபெலவில் அமைந்துள்ள ”சிலோன் லேடிஸ் கெம்பஸ்” தனியார் பாடசாலையின் மாணவி முஹம்மத் அன்வர் பாத்திமா இல்மா மருத்துவ துறையில் , கேகாலை மாவட்டத்தில் முதலாம் இடத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சையிலேயே அவர் இந்த சித்தியை எய்தியுள்ளார்.

இம் மாணவியை பாராட்டுமுகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் அவரை கௌரவித்து பாராட்டு தெரிவிக்கும் நிகழ்வு நேற்று நேற்று வரக்காபொளையில் அமைந்துள்ள சிலோன் லேடிஸ் டெம்பரேச்சில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் ே.அ.அமீன், தலைவி புர்கான் பி இப்திகார் உட்பட அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்து அவரை கௌரவித்தார்கள். கல்லூரியின் பணிப்பாளர் எம்.ஆர்.எம். நபீஸ் பிரமுகர்களை வரவேற்பதனையும் படங்களில் காணலாம்.

**[நவாஸ் அஜ்வதீன்]**

# அகில இலங்கை முஸ்லிம் லீக் நடாத்திய கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியீடு

**[எம்.எஸ்.எம்.ஸாகிர்]**

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு முப்பத்தொரு ஆண்டுகள் நிறைவு பெறுவதனையிட்டு, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் நடாத்திய கட்டுரைப் போட்டியின் முடிவுகளை சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

இப்போட்டியானது ”வட மாகாண முஸ்லிம்களின் இன்றைய அவல நிலையும், அதில் இருந்து தீர்வை நோக்கி’ எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது.

ஏ.எஸ்.பர்ஹானா, பாலாவி புத்தளம் ( சான்றிதழும் ரூபா 15,000 ரூபா பணமும்) முதலாமிடத்தையும், கே.எல்.எம் ஜாபிர், ஓட்டமாவாடி (சான்றிதழும் ரூபா 10,000 பணமும்)இரண்டாமிடத்தையும், ரிஸ்மியா ஹமீத், தெல்தோட்டை (சான்றிதழும் ரூபா 5000 பணமும்) மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

சுமார் 50க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில், மாஜிதா கமால் டீன், எம்.ஜே.எம். ஜாவித் ஹக் - மாவடிச்சேனை, வாழைச்சேனை - 05, யோகராஜா மோகதாஸன், வாழைச்சேனை, ரீ.எம். தாய்க் - கல்பிட்டி ஆகிய நான்கு பேருக்கு விசேட ஆறுதல் பரிசான சான்றிதழ் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளதோடு, போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா விரைவில் கொழும்பில் நடைபெறும் என சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் சஹாப்தீன் தெரிவித்தார்.





சம்சம் மன்றம் நடத்திய சங்கல் நிகழ்வு சனிக்கிழமை கொழும்பில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் யூஸுப் ஹனிபா முப்தி தலைமையில் நடைபெற்றது.பேராசிரியர் சரத் விஜேசேகர உரையாற்றுவதனையும் கலந்து கொண்ட சமயத் தலைவர்கள் உட்பட்ட பிரமுகர்களை பல் படத்தில் காணலாம்.

# நுவரெலியா மாநகரசபைக்கு சொந்தமான காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கமாட்டோம்

## மாநகர சபை உறுப்பினர்கள் வலுவான தீர்மானம்!

**(செ.திவாகரன்)**

நுவரெலியா மாநகரசபைக்கு சொந்தமான கிறகறி ஏரியை சுற்றியுள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கிய அமைச்சரவை பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரி நுவரெலியா மாநகர சபை ஆளுங்கட்சி உறுப்பினர்களும் எதிர்கட்சி உறுப்பினர்களும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள்.

நுவரெலியா மாநகரசபையின் ஒக்டோபர் மாதத்திற்கான மாதாந்த பொதுச் சபைக் கூட்டம் கடந்த (21) வெள்ளிக்கிழமை நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரத்ன தலைமையில் நடைபெற்றது.

இதன் போது நுவரெலியா மாநகரசபை கட்டுபாட்டிலுள்ள பெறுமதியான காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபைபெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. எக்காரணம் கொண்டும் நுவரெலியா மாநகரசபை கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்க முடியாதென மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரத்ன முன் வைத்த தீர்மானத்திற்கு





கூட்டத்தில் கலந்துக்கொண்ட ஆழுகட்சி, எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு வழங்கி ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு மாநகரபை ஆழுங்கட்சி கட்சி உறுப்பினர் (ஐ தே க)சுசந்த பலிஹவடன உறையாற்றுகையில், நுவரெலியாவில் இதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அனைத்துமே தோழ்வியடைந் துள்ளது.உதாரணமாக நுவரெலியாவிமாநகரசபையால் ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலா விடுதியை நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்று தற்பொழுது மூடப்பட்டுள்ளது. அதே போல நுவரெலியாவில் நகர அபிவிருத்தி திட்டங்கள் முற்று பெறாத நிலையில் இருக்கின்றது.

தற்பொழுது கிறகறி ஏரியை சுற்றியுள்ள காணியில் நுவரெலியா மாநகரபை கிறகறி பூங்கா அமைத்து சுற்றுலா பயணிகள் கண்டுகளிப்பதற்கான அபிவிருத்திகள் செய்து பராமரித்து வருகின்றது. இந்த காணியை நகர அபிவிருத்தி சபை பொறுப்பேற்றால் இதனையும் காடாக்கிவிடுவார்கள்.எனவே இந்த காணியை வழங்க முடியாதென கூறினார்.

நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரத்ன கருத்து தெரிவிக்கையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் பெற்றுகொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தை உடனடியாக இரத்து செய்ய கோரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தேவையான ஆவணங்களை நுவரெலியா மாநகரசபை உடனடியாக தயாரித்து அனுப்புவதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளும்படி மாநக சபையின் ஆணையாளர் திருமதி சுஜீவா போதிமான்னவிற்கு உத்தரவிட்டார்.

# 22 வெற்றியும் பஷில் அணியின் ஏமாற்றமும்!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



அரசியல் அமைப்பிற்கான 22 ஆவது திருத்த மசோதா 173 மேலதிக வாக்குகளால் 2022.10. 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இந்த திருத்தத்திற்கு ஆதரவாக 174 வாக்குகளும் எதிராக 01 வாக்கும் கிடைத்தன. ஏதிராக வாக்களித்தவர் முன்னால் பாதுகாப்பு மற்றும் பொலீஸ்துறை அமைச்சராக இருந்த சரத் விஜேசேகர ஆவாவர். அதே நேரம் மேலும் 44 உறுப்பினர்கள் இந்த வாக்களிப்பு நேரத்தில் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை. இவர்கள் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கக் கூடியவர்களில் ஒருசிலரும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு விசுவாசமான ஒருசில உறுப்பினர்களுமாவர்.

இவர்கள் இவ்வாறு ஆதரவளிக்க பின்வாங்கினர் என்றால் அதற்கான காரணமும் இருக்கின்றது. ஆதரவளித்தவர்கள் ஏன் ஆதவளித்தார்கள் என்றால் அதற்கும் காரணம் இருக்கின்றன. பொதுவாக அரசியல் அமைப்பொன்று கொண்டு வரப்படுவது, நடைமுறையில் இருக்கின்ற அரசியல் அமைப்பை திருத்தம் செய்வ தென்பது நாட்டு மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும் என்பது பொதுவாக ஜனநாயக நடைமுறையாகும். ஆனாலும் இலங்கையின் அரசியல் அமைப்பு வரைபு அல்லது திருத்தங்களை முன்வைப்பது என்ற வரலாற்றை அவதானித்தால் ஒட்டுமொத்தமாக தென்படுவது காலத்திற்கு காலம் பதவிக்கு வருகின்ற ஆட்சியாளர்களின் தேவைக்கே இவ்வறான அரசியல் அமைப்புக்களும் திருத்தங்களும் கொண்டுவரப் பட்டிருக்கின்றன.

அந்த வரிசையில் 22 ஆவது திருத்தமும் கடந்த ஏப்ரில் மாதம் ஏற்பட்ட மக்கள் புரட்சியின் பின்னர் ஜூன் மாதம் 09 ஆம் திகதியின் பின்னர் பதவிக்கு வந்த முன்னால் ஜனாதிபதியாக இருந்த கோதாபய ராஜபக்ஷவுக்கு விசுவாசமான நிழல் கோதாபய ஆட்சியின் தேவைக்கு ஏற்ப வரையப்பட்டு மசோதாவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றிக் கொள்ளப் பட்டிருக்கின்றது. இந்த திருத்த மசோதா மீதான விவாதம் 2022 ஒக்டோபர் மாதம் 05 ஆம் 06 திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அந்த குறிக்கப்பட்ட திகதியில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஆதற்கு காரணமாக அமைந்தது அப்போது நான்கு அணிகளாக பிரிந்து ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 22 ஆவது திருத்தத்தை எதிர்ப்பதற்கு தயாராக இருந்தனர். அதனால் அப்போது முயற்சி கைவிடப்பட்டது. பின்னர் ஒருசில திருத்தங்களுடன் மீண்டு சமர்ப்பிக்கப்பட்டு இப்போது நிறைவேற்றப்பட்டிரு க்கின்றது. அப்போது எதிர்த்தவர்கள் ஏன் எதிர்த்தார்கள் என்றால் பல நோக்கங்களின் அடிப்படையில் எதிர்த்தனர். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா தலைமையிலான சமகி ஜனபலவேகய அணியினர் எதிர்த்தமைக்கான காரணம் அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தம் எப்படி இருந்ததோ அதில் சிறதளவும் அல்லது ஒரு பிரிவேனும் மாற்றம் செய்யப்படாமல் அப்படியே இருக்க வேண்டும். ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட மசோதா அதற்கு மாற்றமானதாக அமைந்ததால் எதிர்த்தனர்.

ஆளும் கட்சிக்குள் தற்போதைய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவின் அமைச்சரவையில் இருந்த சிலர் எதிர்த்தமைக்கு காரணம் ஐ.தே.க. பதவியில் இருந்த காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட 19 இல் இருந்த சில விடயங்களுக்கு அவர்கள் உடன்பாடு இல்லாததால் எதிராக வாக்களிப்பதாக கூறினர். ஏனெனில் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான நல்லாட்சி காலத்தில் நிறைவேற்றிய 19 ஆவது திருத்த்தில் இருந்த விடயங்களை 22 இல் உட்படுத்தி மாற்றம் இன்றி சமர்ப்பிப்பதாக கூறி இருந்தார். அதனால் 22 இற்கு ஆதரவளித்தால் அது கோதாபய ராஜபக்ஷவிற்கும் பெசில் ராஜபக்ஷ விற்கும் துரோகம் இலைப்பதாக அமையலாம் என்று அவர்கள் கருதினர். ஆதனால் எதிர்த்தனர்.

மஹிந்த ராஜபக்ஷவிற்கு விசுவாசமான அணியினர் ஏன் எதிர்த்தனர் என்றால் இந்த 22 ஆவது திருத்தத்தில் 20 ஆவது திருத்தில் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தை திருப்திபடுத்தும் வகையில் இரட்டை பிரஜா உரிமை பெறற்வர்களுக்கு இலங்கை பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக் முடியாது என்ற விடயம் உட்படுத்தப்பட்டு 20 இல் உள்ளடங்கி இருந்தவைகளில் சிலவற்றை நீக்கி இருப்பதால் மஹிந்த குடும்பத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் எதிர்த்தனர். குறிப்பாக பெசில் ராஜபக்ஷ அமெரிக்காவிலும் இலங்கையிலும் பிரஜா உரிமை பெற்றுள்ள ஒருவராவார். அதே நேரம் கோதாபய ராஜபக்ஷவும் அதே போன்று இலங்கையிலும் அமெரிக்காவிலும் இரட்டை பிரஜா உரிமை பெற்றிருந்தார்.

ஆனாலும் அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயாரான போது அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்ததோடு அதில் இரட்டை பிரஜா உரிமை பெற்றிருந்தால் இலங்கை பாராளுமன்ற அங்கத்துவம் வகிக் முடியாது என்று இருந்தது. ஆனாலும் அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி நிச்சயம் என்று தொந்ததால் 2019 நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய முன்னர் அமெரிக்க பிரஜா உரிமையை இரத்து செய்து கொண்டார். அதனால் அவருக்கு பாதிப்பு ஏற்படவில்லை. ஆனாலும் அவர் ஜனாதிபதியாகிய பின்னர் அவரது குடும்ப உறுப்பினரான பெசில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்திற்கு எடுத்து அவருக்கு நிதி அமைச்சர் பதவியை வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதனால் 19 இல் இருந்த இரட்டை பிரஜா உரிமை பெற்றவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிக் முடியாது என்ற பிரிவை நீக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்துடன் 19 இல் இருந்த சுயாதீன ஆணைக் குழுக்கல் காரணமாக அரசியல் கையாடல்களை செய்ய முடியாத நிலை காணப்பட்டது. அத்துடன் ஜனாதிபதியன் பதவி தொடர்பாகவும் சில வரையறைகள் காணப்பட்டதால் அவை அனைத்தையும் ஒழித்துக் கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனல் 20 ஆவது திருத்தத்தை கோதாபய ஜனாதிபதியாக இருந்த போது நிறைவேற்றினர். அதே போன்று அரசியல் அமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் 2001 ஆம் ஆண்டு அப்போதைய ஐ.தே.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் 2005 இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகியவுடன் 17 இருந்தவைகளை ஒழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்காக 18 யை நிறைவேற்றினர். அதில் முக்கியமான விடயம் ஏற்கனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்த ஒருவர் இரண்டு முறைக்கு மேல் பதவி வகிக்வோ தேர்தலில் போட்டியிடவோ முடியாது என்று இருந்ததை இல்லாதொழித்து எத்தனை முறையும் போட்டியிடவும் ஜனாதிபதியாக பதவி வகிக்வும் மடியும் என்று அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் தேவைக்கு ஏற்ப 18 கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் 2019 ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சி தலைமையிலான நல்லாட்சி காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆப்பு வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் 19 கொண்டு வரப்பட்டது.

அதன்படி 19 ஆவது திருத்தம் 2019 இல் அதே மஹிந்த குடும்ப ஆட்சியிலும் இப்போது 22 ஆவது திருத்தம் மஹிந்த குடும்பத்தின் நிழல் ஆட்சியிலும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது. இந்த 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முன்னர் இரட்டை பிரஜா உரிமை பெறற்வர்களுக்கு பாராளுமன் உறுப்பினராக முடியும் என்ற விடயத்தை அப்படியே விட்டு வைக்க ஜனாதிபதியும் அவருக்கு விசுவாசமாக தற்போது அரசாங்கத்தில் இருப்பவர்களும் முயற்சி எடுத்தனர். காரணம் பெசில் ராஜபக்ஷ தான் இந்த அரசாங்கத்தை பின்னணியில் இருந்து இயக்குவதாகவும் அவரின் தேவைக்கு ஏற்பவே அனைத்தும் நடைபெறுகின்றது என்ற கருத்துக்களும் நிலவி வருகின்றது.

ஆனாலும் ஸ்ரீ.ல.சு.கட்சி, சமகி, ஜனபலவேகய உட்பட பிரதான கட்சிகளின் ஊறுப்பினர்கள் அந்த திட்டத்தை எதிர்த்தனர். அத்துடன் பொதுஜன பெரமு ணவிற்குல் மூன்றாவது அணியொன்றும் உருவாகும் நிலை காணப்பட்டது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காத நிலை தென்பட்டதால் பின்னர் 22 இல் முன்வைக்கப்படட சில பிரிவுகள் திருத்தம் செய்யப்பட்டன. குறிப்பாக ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைக்கும் காலப்பகுதி இரண்டை வருடம் என்றும் ஜனாதி பதியின் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்துகின்ற முறையை கண்காணிக்க வென அரசியல் அமைப்பு பேரவையை ஏற்படுத்துதல் மற்றும் இரட்டை பிரஜா உரிமை பெற்றவருக்கு பாராளுமன்றம் உறுப்பினராக வர முடியாது என்ற விடயங்கள் உட்படுத்தப்பட்டதால் எதிர்த்தவர்கள் அனைவரும் ஆதரவாக வாக்களிக்க முன்வந்தனர்.

இதில் அரசாங்கத்தின் இன்னும் சில உள் நோக்கங்கள் இருப்பதாகவும் புலனாகின்றது. நாட்டில் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடி நிலை ஒன்று நிலவுகின்ற நேரத்தில் எதற்காக இப்படியான அரசியல் அமைப்பிற்கான திருத்தம் தேவை? அதனால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிட்டுமா? மக்களுக்கு அரசியல் அமைப்பு திருத்தத்தால் என்ன கிடைக்கப்போகின்றது போன்ற பல கேள்விகள் எழுகின்றன. எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெற வேண்டி இருக்கின்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை பின்போட வேண்டும். அடுத்த விடயமாக தற்போது பொதுஜன பெரமுண கட்சியின் கோதாபய ராஜபக்ஷவுக்கு விசுவாசமான அணியே ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவுடன் ஒட்டிக் கொண்டு இருக்கின்றனர்.

இவர்கள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறி மீண்டும் ஒருமுறை ஆட்சியை கவிழ்த்து மஹிந்த அணியினருடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைபப்டுத்திய ஆட்சி மாற்றத்திற்கு முயற்சி எடுத்தால் அரசாங்கம் பெரும்பான்மை இழந்தால் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டால் அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டரை வருடங்கள் பூர்த்தியடையும் வரையில் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என்று 22 இல் வரும் போது இந்த ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள முடியுமாகின்றது. 19 இல் மைத்திரிபால சிரிசேனா பாராளுமன்றத்தை கலைத்து அப்போது அமைச்சரவையாகவும் பிரதமராகவும் இருந்த இதே ரனிலின் பதவிக்கு ஆப்பு வைக்காமல் இருக்கவே நான்கரை வருடங்கள் நிறைவடையும் வரையில் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என்ற பிரிவு சேர்க்கப்பட்டிருந்தது. அதே போன்ற ஒரு பாதுகாப்பே தற்போதைய 22 ஆவது திருத்தமும் ஆகும்.

எப்படியோ தற்போதைய நிலையில் தமது ஆட்சிக்கு பெரும்பான்மை பலத்துக்கும் அதிகமான ஆதரவு இருக்கின்றது. அதுவும் அரசாங்கம் பலமானதாக ஸ்தீரமாக இருக்கின்றது. இன்னும் இரண்டு வருடங்களுக்கு மேல் போக முடியும் என்பதை சர்வதேசத்திற்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய தேவை ரனில் ஜனாதிபதிக்கு இருந்ததை இந்த 22 இற்கான 174 ஆதரவு நிரூபித்திருக்கின்றது. அதன் மூலம் ஜீ.எஸ்ரி. பிளஸ் சலுகை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் சலுகை போன்றவற்றிற்கும் அரசாங்கம் ஜ்தீரமானது, அதற்கு மக்கள் ஆதரவு இருக்கின்றது என்பதை சர்வதேசத்திற்கு காட்ட வேண்டும்.

அத்துடன் 22 இற்கான அரசாங்கத்திற்கு வெளியில் உள்ள பிரதான எதிர்க்கட்சி உட்பட ஏனைய உறுப்பினர்களின் ஆதரவானது கோதாயவாதிகளையும் மஹிந்தவாதிகளையும் திட்டவட்டமாக பிரித்து வெளியே எடுத்திருக்கின்றது. இப்படியாக 22 நிறைவேற்றப்பட்டது பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தவல்ல என்பது தெளிவாக தெரிகின்றது.

இந்த 22 ஆல் நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு எதையும் செய்ய முடியாது. மக்களுக்கும் இதனால் எந்த நன்மையும் இல்லை. ஏற்கனவே அவ்வப்போது வந்த ஆட்சியாளர்களின் தேவையை நிறைவேற்றிய வரிசையில் இதுவும் ஒன்று எனலாம். அத்துடன் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவின் தந்திரோபாயமான காய்நகர்த்தலின் ஓர் நகர்வு இதுவாகும்.

# ஜனாதிபதி சவாலை எதிர்கொள்வாரா?



■ **மபாஸ் சனூான்**

சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக கடந்த ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். சில நாட்களுக்குப் பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கின்ற போது ஓர் ஊடகவியலாளர் மக்கள் போராட்டத்தைப் பற்றிய உங்களது கருத்து என்ன? அது இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா? என்று ரஞ்சன் ராமநாயகவிடம் வினவினார். அப்போது ரஞ்சன் ராமநாயக "தம்பி! மக்கள் அதள பாதளத்தில் விழுந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வெளியில் அவர்கள் சிரித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் உள்ளத்திலிருந்து நெருப்பு கக்கிக் கொண்டுள்ளது. அது சில நாட்களில் வெடித்துச் சீறிப் பாயும் என்று குறிப்பிட்டார்.

சிவில் அமைப்புக்கள் உள்ளடங்கலாக பொது மக்கள் கழகங்கள் கடந்த ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி செய்த போராட்டத்தின் விளைவாக முன்னாள் ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷவுக்குத் தனது பதவியினை இழக்க நேர்ந்தது. இந்த நிலையில் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்ஹ கடந்த ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி பாராளமன்ற வாக்கெடுப்பின் மூலம் இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ரணில் விக்ரமசிங்ஹவின் தெரிவுடன் நாட்டில் சில ஆரோக்கியமான மாற்றங்கள் நடைபெற்றன. பெற்றோலுக்கான நீண்ட அணி வரிசை இல்லாது சென்றது. பெற்றோலுக்கான கறுப்புச் சந்தை முடக்கப்பட்டது. நீண்ட நேர மின் துண்டிப்பின் கால அளவு குறைக்கப்பட்டது. சில அத்தியவசியப் பொருட்களின் விலைகள் குறைந்தன. ரணில் விக்ரமசிங்ஹ ஜனாதிபதியாகியதன் பின்னர் ஓரளவு வாழக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக சிலர் தெரிவிக்கின்றனர்.

உண்மையாக ரணில் விக்ரமசிங்ஹவின் அரசாங்கம் இந்த நாட்டில் உருவாக்கி இருக்கின்ற தோற்றம் ஒரு மாயையாக இருக்கின்றது. பொருளாதார நெருக்கடிக்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவின் முயற்சிகள் கண் துடைப்பான தற்காலிகத் தீர்வுகளாக இருக்கின்றன. வெளி நாடுகளுக்கு விஜயம் செய்து இந்த நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைப் போன்ற ஒரு பிரம்மையை சித்தரித்துள்ளார். நீண்ட கால ஒரு பழுத்த அரசியல்வாதி என்கின்ற வகையில் மனிதர்களின் உணர்வுகளை தக்க சமயங்களில் கட்டுப்படுத்துகின்ற நெளிவு சுளிவுகளை அவர் அறிந்து வைத்துள்ளார். மக்களின் கொதிக்கின்ற உணர்வலைகள் மிகச் சாதுாரியமாக நிர்வாகம் செய்யப்படுகின்றன. இதனை ஆட்சியாளர் சார்பான ஊடகங்கள் தத்துரூபமாக வடிவமைத்தும் காட்டுகின்றன.

உண்மையான நிலவரம் அரசாங்கம் சித்தரிக்கின்ற நிலையாக இல்லை. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்று ஔவையார் சொன்னார். இந்த நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியால் பத்து அல்ல பதினொன்றும் பறந்து போகின்ற நிலையில் இருக்கின்றனர். உணவுப் பொருட்களின் விலை ஒரு கட்டுப்பாட்டில் இல்லை. அது தினம் தோறும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. நாட்டில் கல்சியக் குறைபாடு ஏற்பட்டுள்ளது. அச்சுத் தாளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. கடந்த இரு மாதங்களாக இதன் வெளிப்பாடுகள் நாட்டில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களாக வெடித்தன. தற்போதும் ஆங்காங்கே வெடிக்கின்றன. இந்த சூழ் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவின் நகர்வுகள் முன்னாள் ஜனாதிபதி கோடாபய ராஜபக்வைப் போன்றதாக இல்லை.

இந்த எழுச்சிகளை ஜனாதிபதி வெற்றிகரமாக கையாளுவதாக அல்லது அடக்குவதாக அதிகமானோர் கருதுகின்றனர். ஆர்ப்பாட்டங்களின் போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றது. சட்டத்தைக் கொண்டு அதனைக் கட்டுப்படுத்துகின்ற நிலமையும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம். ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்படுகின்றனர். கடந்த ஒக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி களனிப் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டார்கள். முன்னர் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டோரும் தேடப்பட்டுக் கைது செய்யப்படுகின்றனர். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே தடுப்புக் காவலில் இருக்கின்றார். பிரித்தாளுகின்ற ஆளுமையில் தேர்ச்சி பெற்றவரான ஜனாதிபதி தனது திறமையை மக்கள் எழுச்சிகளின் போது பயன்படுத்துவதை அவதானிக்கலாம். ஆர்ப்பாட்டங்களின் போது மக்கள் ஒன்று சேருவது மிகச் சாணக்கியமாக முடக்கப்படுகின்றது. ஏதோ அரச ஊழியர்களைப் பிரிப்பது போன்ற சுற்று நிருபங்கள் வெளியிடப்படுகின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பின் பிளவுக்கு தற்போயை ஜனாதிபதியே காரணகர்தவாக இருந்ததை வரலாற்றை அறிந்தோர் நன்றாக அறிவர். தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற யாழ்ப்பாண - மட்டக்களப்புப் பாகுபாட்டை அதற்கான ஆயுதமாக அவர் கையாண்டார். சிறீலங்கா சுதந்திரக் கட்சி 2015ஆம் ஆண்டு இரண்டாகப் பிளவுபட்டு அதிலிருந்து வேறொரு கட்சி தோன்றுவதற்கும் அடிப்படையான காரணமாக தற்போதைய ஜனாதிபதி இருக்கின்றார். இந்த வகையில் கடந்த இரண்டு மாதங்களாக ஜனாதிபதிப் பதவியில் இருந்து கொண்டு ரணில் விக்ரமசிங்ஹ செயற்பட்ட விதம் மற்றும் அவருடைய கடந்த கால வரலாறு என்பனவற்றைக் கொண்டு அவரைக் கதிரையிலிருந்து அசைக்க முடியாது. அவர் கதியைிலிருந்து அசையமாட்டார் என்றவாறான கருத்துக்களை பெரும்பாலானோர் கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டு அல்லது மூன்று மாதங்களாக நடைபெற்ற பொது மக்கள் சார்ந்த அதிகமான நிகழ்வுகள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஆனால் இந்த நிலை நிரந்தரமானதாக இல்லை. அதிகமான நிகழ்வுகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் கட்டுப்பாட்டை மீறீ நடைபெறுவதற்கான காலம் வெகு துாரத்தில் இல்லை. அதற்கான சில சமிஞைகளை இந்த ஒக்டோபர் மாதத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்சி மாற்றம் தொடர்பாக ஒரு ஊடகவியலாளர் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் 'நீங்கள் சூழ்ச்சி செய்து மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை கவிழ்த்தீர்கள் அல்லவா? என்று வினவினார். அதற்கு அவர் சூழ்ச்சி செய்தாவது அந்த ஆட்சியை கவிழ்க்கவில்லை என்றால் இந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் என்று அவர் அப்போது பதில் சொன்னார். சூழ்ச்சி செய்து கவிழ்க்கப்பட்ட ஆட்சியை இந்த நாட்டின் கௌரவப் பொது மக்கள் 2019ஆம் ஆண்டு மீண்டும் ஸ்தாபித்தார்கள். ராஜித சேனாரத்ன சொன்னது போல் பஞ்சம் ஏற்பட்டது. இப்போது ஸ்தாபித்த ஆட்சியைப் பற்றி அதிகமான மக்கள் தங்களுக்குத் தாங்களே சாபம் வேண்டுகின்றனர்.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறையுள் என்று சமூகவியல் குறிப்பிடுகின்றது. அதிலும் மிக முக்கியமானதாக உணவு இருக்கின்றது. இந்த அடிப்படைத் தேவைகளை ஈடு செய்து கொள்ளுவதற்கு இந்த நாட்டின் அதிகமான மக்கள் ஒவ்வொரு நாளும் பெரும் போராட்டத்தை செய்ய வேண்டி இருக்கின்றது. வாழ்வாதாரத் தொழில்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. மீன் பிடித் தொழில், விவசாயம், பண்ணைத் தொழில் என்று அனைத்தும் வீழ்ச்சி அடைந்துள்ளன. இந்த நிலையில் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளுவதற்காக ஆட்சியாளர்கள் பயன்படுத்துகின்ற உத்திகளும் தந்திரங்களும் தொடர்ந்து பலிக்காது. மக்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளையே ஆட்சியாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றனர்.

கடந்த இரு மாதங்களை விட தற்போது அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெறுவதைக் காணலாம். ஓப்பீட்டளவில் கடந்த மாதங்களை விட தற்போது அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்ததாக இருக்கின்றன. அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் சக்திகள் மற்றும் சிவில் அமைப்புகள் மக்கள் எதிர்ப்புகளை கேந்திரமாகக் கொண்டு ஒன்று சேருவதை அவதானிக்கலாம். பொதுஜன பெரமுனவின் டளஸ் அழகப்பெரும அணியினர், ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தேசிய சுதந்திர முன்னணி, முற்போக்கு சோசிலிச முன்னணி, தொழிலாளர் சங்கங்கள், அஸ்கிரிய மல்வத்து பீடங்கள், தேசிய மக்கள் சபை என்ற அனைத்தும் ஒருமித்த கருத்தில் இந்த ஆட்சியைப் புறக்கணிக்கின்றன. ரணில் விக்ரமசிங்ஹவுக்கு பொது மக்களின் ஆதரவு இல்லாது இருக்கின்றது.

இந்த சூழ்நிலையில் இன்னும் மூன்று மாதங்களுக்கு அப்பால் ரணில் விக்ரமசிங்ஹவுக்கு தனது ஜனாதிபதிப் பதவியினை தாக்குப் பிடிக்க இயலாது போய் விடும். அரசாங்கத்துக்கு எதிராகத் தீவிரமாகின்ற எதிர்ப்பினை பார்க்கின்ற போது எதிர்வருகின்ற ஜனவரி மாதத்தில் ஜனாதிபதிக்கு தனது பதவியினை கைவிட வேண்டிய இக்கட்டான நிலமை உருவாகும் என்று அனுமானிக்கலாம். அந்த நிலையில் அவர் தனது பதவியை துறப்பது கௌரவமான முறையிலா அல்லது கோடாபய ராஜபக்ஷ வைப் போல் துறப்பாரா என்கின்ற விடயம் அவரின் கைகளில் தங்கி இருக்கின்றது. ஓர் இணக்கப்பட்டின் மூலம் அதிகாரம் கை மாறுவதற்கு அவர் விரும்பினால் கௌரவமாக அவர் தனது பதவியில் இருந்து ஓய்வு பெறுவார். எதிர்காலத்தில் வலுக்கப் போகின்ற எதிர்ப்புக்கு மத்தியில் அவர் தனது பதவியினை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருந்தால் அவருக்கு நிர்ப்பந்த நிலையில் அகௌரவமாக தனது பதவியை துறக்க வேண்டிய துரதிஷ்டமான நிலமை உருவாகும்.


**வாசகர்களே!**

இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது. உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.

**editor@newsplus.lk**